# سُوْرَةُ الْفَاتِحَةِ

## ஸூரதுல் பாதிஹா – தோற்றுவாய்

1

விரிவுரையாளர்களில் சிலர் இதனை 'மக்கீ அத்தியாயம்' என்பர்; சிலர் 'மதனீ' என்பர்; இன்னும் சிலரோ இவ்வத்தியாயம் இருமுறை அருளப்பட்டுள்ளது, என்பர். அல் மதீனா - முஸ்ஹபின்படி

**இந்த ஸூரா 'மக்கீ' ஆகும்**

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

இறைவேதங்கள் அனைத்தின் சாராம்சமும் ஸூரா பாத்திஹாவில் இடம் பெற்றுள்ளது.1

சில மார்க்க அறிஞர்கள், இவ்வத்தியாயம் ‘உம்முல் கிதாப்’, ‘உம்முல் குர்ஆன்’, என அழைக்கப்படுவதற்கு மேற்கண்ட கருத்தையும் ஒரு காரணமாகக் கூறுகிறார்கள்.2

திருக்குர்ஆனின் போதனைகள், (1)கொள்கை (2)வணக்கம் (3)வாழ்க்கை முறை (4)நல்லோர்-தீயோர் நடைமுறை மற்றும் தீயோருக்கு ஏற்படுகின்ற, மோசமான கதியை விளக்கும் சரித்திரங்கள் ஆகியவைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இவை யாவும் ஸூரா அல்-பாதிஹா’வில் சொல்லப்பட்டுள்ளன. இதனை, இமாம் ஸுயூத்தி (ரஹ்) அவர்களும், ‘ஸூரதுல் பாதிஹா’விற்கான தன் விளக்க உரையில், ‘‘பொதுவாக, திருக்குர்ஆனில் இடம்பெறுகின்ற நான்கு வகையான கல்வியும், ‘ஸூரதுல் பாதிஹா’விலே இருக்கிறது’’, என தெளிவுபடுத்தியுள்ளார்கள். மேலும் இவ்வத்தியாயத்திற்கு ‘பராஅதுல் இஸ்திஹ்லால்’ - ‘அழகிய ஆரம்பம்’ என்கிற பெயரையும் சூட்டியுள்ளார்கள்.

(1) கொள்கை: الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ () الرَّحْمَنِ الرَّحِيمِ () مَالِكِ يَوْمِ الدِّينِ
(2) வணக்கம்: إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ
(3) வாழ்க்கை முறை: اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ
(4) சரித்திரங்கள்: صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

மனிதர்களின் மனங்களில் பொதுவாகப், பொங்கி வருகின்ற ஆறு கேள்விகளுக்கு ஸூரா அல்-பாதிஹாவின் பின்னனியில், பதில்கள்.

1) நான் யார்? விடை: நான், அல்லாஹ்வின் அடிமையாவேன்.

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

2) என்னைப் படைத்தவன் யார்? விடை: என்னை அல்லாஹு தஆலா படைத்தான்.

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ () الرَّحْمَنِ الرَّحِيمِ

1. பார்க்க: மஜ்மூ∴ பதாவா – 14 ல் 7
2. இர்ஷாதுல் அக்லுஸ்ஸலீமு இலா மஜாயல் கிதாபில் கரீம் லி அபீ ஸ∴து

3) மரணித்தபின் நான் எங்கே செல்லவேண்டும்? என் நிலை என்னவாகும்?

விடை: நான் ‘பர்ஜக்’ - கப்ரு வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டும்; அதன்பின் மறுமையில் என் (செயலுக்கான) கணக்கு பார்க்கப்படும்.

مَالِكِ يَوْمِ الدِّينِ

4) நான் என்ன செய்ய வேண்டும்? யாரை வணங்க வேண்டும்? எப்படி வணங்க வேண்டும்?

விடை: நான், நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த முறையில், அல்லாஹ்வை மட்டும் வணங்கி வரவேண்டும்.

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

இப்னு தைமியா (ரஹ்) அவர்கள், கூறுகிறார்கள்: ‘‘பின் வரும் இரு கேள்விகளுக்கான விடையில், முழு இஸ்லாமும் அடங்கிவிடும். (அவையாவன)

1. நீங்கள் யாரை வணங்குகிறீர்கள்?
   விடை: அல்லாஹ்வையே வணங்குகிறோம்.
2. அந்த ஓரிறைவனை வணங்குவதிலும், அந்த ஓரிறைவனுக்கு வாழ்வின் துறைகள்தோறும் அடிபணிந்து, அவனை வழிபடுவதிலும் நீ எப்படி நடந்து கொள்வாய்?

விடை: நபி (ஸல்) அவர்கள், தந்திட்ட வழிமுறைகளின்படி நடப்பேன்.

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ () اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ()
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ()

5) நான் எதைச் செய்யக் கூடாது?
அல்லாஹ்விற்குக் கோபமூட்டுகிறவர் மற்றும் வழிகேட்டில் செல்வோர் பாதையில் நடக்கக் கூடாது.

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

6) அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுகின்ற வழி என்ன?
நபி(ஸல்) அவர்கள் மற்றும் நபித்தோழர்களின் வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ () صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

---

1 பார்க்க: அஸ்ஸியாஸதுஷ்ஷரீஅஹ் - இப்னு தைமிய்யா (ரஹ்)
2 இக்திளாவுஸ் ஸிராதில் முஸ்தகீம் - இப்னு தைமிய்யா (ரஹ்)
3 பார்க்க : அல் மன்ஹஜில் இல்மிய்யஹ் பீ தலபில் இல்ம் - அஷ்ஷைக் ஸாலிஹ் ஆலு ஷைக் மற்றும் மௌகிப் அஹ்லிஸ் ஸுன்னஹ் வல் ஜமாஅஹ் மினல் பிதஇ வல் அஹ்வா

- இந்த அத்தியாயம் ஒவ்வொரு தொழுகையிலும், ஒவ்வொரு இரக்அத்திலும் ஓதப்படவேண்டும் . (புகாரீ-756,முஸ்லிம்-394)1
- இந்த அத்தியாயத்திற்குப் பல பெயர்கள் உள்ளன: அவை – அஸ்ஸலாஹ், அல்ஹம்து, பாதிஹதுல் கிதாப், உம்முல் கிதாப், உம்முல் குர்ஆன், அஸ்ஸப்வுல் மஸானீ, அல்குர்ஆனுல் அழீம், அஷ்ஷிபா, அர்ருக்யஹ், அல்அஸாஸ், அல்வாபி(f)யஹ், அல்காபி(f)யஹ்.2

## சில தலைப்புகள்
## *Few Topics*

(1) அல்லாஹ்வைப் பற்றிய வர்ணனைகளும் புகழ்ச்சியும். (1-3)
(2) வணக்க வழிபாட்டிற்குரியவன் அல்லாஹ் ஒருவனே! அவனிடமே துஆ – பிரார்த்திக்க வேண்டும். (4)
(3) மேலும் ஸிராதுல் முஸ்தகீம் - என்கிற நேர்வழியை அடைவதே மு.்.மின்கள் - விசுவாசிகளின், அவா; அதுவே அவர்களின் 'துஆ'... மேலும் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தையும், வழிகேட்டையும் அஞ்சுகிறார்கள்.(5-7)

## சில பாடங்கள்
## *Few Lessons*

**I-** ஸூரதுல் பாதிஹாவில், மார்க்கத்தின் அடிப்படை விபரங்கள் உள்ளன. பின்வரும் பத்து சிறப்பம்சங்கள் மூலமாக, இது தெளிவாகிறது.

1- தவ்ஹீதின் மூன்று வகைகள்:
- தவ்ஹீதுல் உலூஹிய்யஹ் (வணக்க வழிபாட்டில் ஏகத்துவம்) الْحَمْدُ لِلَّهِ
- தவ்ஹீதுர் ருபூபிய்யஹ் (நிர்வாகத்தில் ஏகத்துவம்) رَبِّ الْعَالَمِينَ
- தவ்ஹீதுல் அஸ்மா.்.வஸ்ஸிபாத் (திருநாமங்களிலும் தன்மைகளிலும் ஏகத்துவம்)3 الرَّحْمَنِ الرَّحِيمِ

2- அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காக நன்றி கூறுதல். الْحَمْدُ لِلَّهِ
3- இக்லாஸ் (மனத்தூய்மையுடனான வணக்கம்)
إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

1. பார்க்க: நமாஜே நபவீ – டாக்டர் ஷபீகுர் ரஹ்மான்
2. அல் இத்கான் பீ உலூமில் குர்ஆன் லிஸ்ஸுயூத்தீ
3. பார்க்க˙ மதாரிஜுஸ் ஸாலிகீன் - இப்னுல் கையிம் (ரஹ்)

4- இனிய சகவாசம் صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

5- இஸ்திகாமத் - இஸ்லாத்தை உறுதிகுலையாமல் பற்றுதல்
اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ

6- ‘துஆ’ - வின் முக்கியத்துவம் اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ

7- ஒருங்கிணைந்த சமுதாயம் إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

8- சரித்திரம் தரும் படிப்பினை
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

9- ஆலாவுல்லாஹ் - அல்லாஹ்வின் அருட்கொடைகள், அய்யாமுல்லாஹ் - அல்லாஹ்வின் நாட்கள், ஆயாதுல்லாஹ் - அல்லாஹ்வின் அத்தாட்சிகள், மற்றும் அல்லாஹ்வின் அருட்கொடைகளைக், கவனமாகச் சிந்தித்தல்.

10- சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவது கட்டாயமாகும். اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ

**II-** ஒரு அடியான் தொழுகையில் இவ்வத்தியாயத்தைப் படிக்கும்போது, அல்லாஹ்வுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களில், குறைந்தது பத்து ஒப்பந்தங்களை நிறைவேற்றுகிறான்.1

1- இதனையே அஷ்ஷைக் அப்துர் ரஸ்ஸாக் ஹபிழஹுல்லாஹ் அவர்களின் நூல், ‘‘உண்மையில் ஸூரதுல் பாதிஹா, வாக்குறுதியும், ஒப்பந்தமும்தான்’’ என்கிறது. இந்த நூலில் இடம் பெற்றுள்ள பத்து ஒப்பந்தங்களுடைய தொகுப்பின், சாராம்சம் மற்றும் விளக்கம் உங்கள் முன் இதோ:-
‘தவ்ஹீதுர்-ருபூபிய்யஹ்’ மற்றும் ‘தவ்ஹீதுல் அஸ்மாஇ வஸ்ஸிபாத்’ ஆகிய இரணடு மட்டும், (மறுமை) வெற்றிக்குரிய வழிகளாக ஆக முடியாது. தவ்ஹீதுல் உலூஹிய்யஹ் (வணக்க வழிபாட்டில் ஏகத்துவம்), தான் வெற்றிக்கான முழு முதல் காரணமாகும்; அதுவே நோக்கமுமாகும்.நபிமார்கள் மற்றும் வேதங்கள், அருளப்பட்டதன் நோக்கமும் ‘தவ்ஹீதுல் உலூஹிய்யஹ்’தான். அதாவது வணக்க வழிபாட்டிலுள்ள ஏகத்துவமே ஆகும். அல்லாஹு தஆலா, இதனை இப்படிக் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ
அல்அன்பியா:25)2

2- ‘என்னை வளர்ப்பவன் அல்லாஹ்’ என்பதே என் கொள்கை என்கிறபோது, நான் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. அதாவது படைப்புகளைச் சார்ந்து (depend) நிராசைக்குப் (depression) பலியாவதில் எந்தப் பயனுமில்லை. الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

---

1. விபரஙகளுக்கு : மின்ஹிதாயாதி ஸூரதில் பாதிஹா
2. மன்ஹஜுல் அன்பியா பீஹில் ஹிக்மது வல் அக்லு

3- அடுத்தவர்களுக்கு அநீதம் இழைப்பதில் இருந்தும், அலட்சியத்திற்கு இரையாகுவதில் இருந்தும், தப்பிக்கத் தினமும், நான் மறுமையை நினைப்பேன். مَالِكِ يَوْمِ الدِّينِ
4- நான் அல்லாஹ்வின் அடிமை! இதுவே என் அசல் அறிமுகம்.

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ

5- மிகப்பெரிய 'துஆ', ஹிதாயத் - நேர்வழிக்கான பிரார்த்தனை ஆகும். நேர்வழி பெறுதல் மற்றும் நேர்வழியைக் காட்டுதல், இரண்டும் இதில் அடக்கம்.

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ

6- 'ஸூரதுல் பாதிஹா'வின் இரண்டாம் வசனத்தின் மீதான நம்பிக்கை, الرَّحْمَنِ الرَّحِيمِ என்னுள் நம்பிக்கையை அதாவது எதிர்பார்ப்பைத் தோற்றுவிக்கிறது எனில், مَالِكِ يَوْمِ الدِّينِ என்கிற வசனமோ என்னுள் அச்சத்தை ஏற்படுத்துகிறது. இது ஸஹீஹுல் புகாரீ-யின் பிரபல்யமான பாடம் الايمان بين الخوف والرجاء (ஈமான் அச்சத்திற்கும் ஆதரவிற்கும் இடையிலே இருக்கிறது.) என்பதிலும் உள்ளது.[1]
7- நல்லோர் சரித்திரத்தில் படிப்பினை பெறுவேன்; நபி (ஸல்) அவர்கள் மற்றும் நபித்தோழர்கள் வழிமுறைகளின்படி செயல்படுவேன்.
8- அஸ்ஸிராதுல் முஸ்தகீம் - எனும் நேரான பாதையை தினமும் எண்ணிப் பார்ப்பேன்.
9- நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடப்பதன் மூலம், அல்லாஹ்வின் அன்பை அடைந்திட முயல்வேன். அதாவது 'ஷிர்க்'கையும், பித்அத்தையும், அவ்வாறே நேர்வழியை விட்டு விலக்குகின்ற எல்லா செயல்களையும் தவிர்ப்பேன்.
10- சரித்திரத்தில் அவிசுவாசிகளுக்கு ஏற்பட்ட, (மோசமான) முடிவில் இருந்து, பாடம் பெறுவேன்.

**III-** இந்தியத் துணைக்கண்டத்தில் திருநாமங்களும், தன்மைகளும் என்கிற தலைப்பின், முக்கியமான இரு விஷயங்களில், நிலவுகின்ற விளக்கக் குறைபாட்டைச் சீர்படுத்துவதில், கவனம் காட்டுவது இன்றியமையாததாகும்.

A.-அல்லாஹ் எங்கே இருக்கிறான்?

❖ இக் கேள்விக்கு உரிய பதில் இதுதான்..! 'அல்லாஹ்'-வின் திருமேனி, அர்ஷில் உள்ளது; அவனது ஞானம், எல்லா இடங்களையும் சூழ்ந்து உள்ளது.
அர்ரஹ்மான் அர்ஷின் மீது அமைந்தான்.[2]
( தாஹா : 05) الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى

---

1. பதாவா இப்னு தைமியா பாகம் 10 பக் 63
2. உலுவ்வுல்லாஹி அலா கல்கிஹீ - மூஸா துவைஷ் பி.எச்.டி ஆயவுககட்டுரை (நிச்சயம் படிக்கவும்)

- ❖ ‘அர்ரஸாயிலுஸ் ஸப்வு’-எனும் நூலின் தகவல்படி, இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களின் அகீதா – கொள்கையும் இதுவேதான்..! ‘‘அல்லாஹுﷻ தஆலா-வின் உடல் அர்ஷின் மீது உள்ளது. அவனுடைய அறிவு, எங்கும் இருக்கிறது’’. இதர இமாம்களின் கொள்கையும் இதுதான்!!
- ❖ அல் அஸ் மா.ஃ. வஸ் ஸிபாத் (திருப் பெயர் கள் மற் றும் தன்மைகளில்) பின் வரும் அடிப்படைகள் கவனிக்கப்பட வேண்டும்..!

  இப்னு அபீஸைத் (ரஹ்) அவர்கள், கூறுகிறார்கள்:

  ولله الاسماء الحسنى والصفات العلى மிக அழகான திருப்பெயர்கள் அவனுக்கே! மிக உயர்வான தன்மைகளும் அவனுக்கே!’’1
- ❖ இதன் விளக்கவுரையில், அஷ்ஷைக் அப்துல் முஹ்ஸின் அல்அப்பாத் அல்மதனீ (ரஹ்) இப்படிச் சொல்கிறார்கள்: ‘‘திருப்பெயர்கள் மற்றும் தன்மைகளில், எவைகளை அல்லாஹுﷻ தஆலா தனக்காகக் கூறியுள்ளானோ, அல்லது அவனுக்கு உரியதாக, எவைகளையெல்லாம் நபி (ஸல்) அவர்கள் உறுதிப் படுத்துகிறார்களோ, அவைகளை மட்டுமே, உறுதியுடன் ஏற்க வேண்டும். அல்லாஹுﷻ ஸுﷻப்ஹானஹுﷻ வ தஆலா-வின் தகுதிக்கும் மகத்துவத்திற்கும், ஏற்ப (ஏற்கப்பட்டு) உள்ள தன் மைகளில்..., தவறான விளக்கங்களைக் கூறுதல் (த.ஃ.வீலாதே பாதிலஹ்), தன்மைகளில் கேள்வி கேட்டல் (தக்யீப்), படைப்புகளால் உதாரணம் கற்பித்தல் (தம்ஸீல்), ஆகியன கூடாது. (தன்மைகளை) மாற்றுதல் (தஹ்ரீப்), இல்லாமையை வாதித்தல் (த.ஃ.தீல்), முதலியவைகளை தவிர்ப்பதோடு, அற்பமான தன்மைகள் அனைத்திலிருந்தும், அல்லாஹ்வைப் பரிசுத்தப் படுத்துக! இப்படியான அகீதாவை – கொள்கையை மனதில் பதித்திடுக! இதனையே திருக்குர்ஆனில் لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِير ( அஷ்ஷுﷻரா : 11) என அல்லாஹுﷻ தஆலா கூறுகிறான்.
- ❖ அல் லாஹுﷻ தஆலா-வின் திருநாமங் கள், குறிப்பிட்ட எண்ணிக்கையில் வரையறுக்கப்பட வில்லை. அவைகளில் சிலவற்றை மக்களுக்கு அருளியிருக்கிறான். இன்னும் சிலவற்றை தன் மறைவான ஞானத்தில் வைத்துள்ளான்.2

B. ‘தவ்ஹீதுர் ருபூபிய்யஹ்’- வாழ்க்கையின் அசல் நோக்கமில்லை. ‘தவ்ஹீதுல் உலூஹிய்யஹ்’ தான் இம்மை, மறுமை இரண்டின் நோக்கமுமாகும். தவ்ஹீதுர் ருபூபிய்யஹ்’ மற்றும் ‘தவ்ஹீதுல் அஸ்மா.ஃ. வஸ்ஸிபாத்’ ஆகியவைகளை அடிப்படையாகக்

---

1. முகத்தமஹ் பின் அபீஸைத் அல் கைர்வானீ (விளக்கத்துடன்): குத்புல் ஜனீ அத்தானீ பாகம் 9 பக் 82 முஸ்னத் அஹ்மத் - இப்னு ஹஜர் (ரஹ்) இந்த ஹதீஸை ஹஸன் என்கிறார்கள். அஷ்ஷைக் அல்பானீ (ரஹ்) தன் அஸ்ஸில்ஸிலதுஸ் ஸஹீஹஹ் - 198, 199 ல் ஸஹீஹ் என்கிறார்கள்

கொண்டு 'தவ்ஹீதுல் உலூஹிய்யஹ்' எதிர்பார்க்கப்படுகிறது.

IV- இவ் வத்தியாயத்தை, 'அல்பாதிஹா' எனச் சொல்வதே, இதனுடைய ஒரு தனிச் சிறப்பு ஆகும். துவக்கதிற்காக இதர ஸூராக்கள் இருக்கத்தக்க, இவ்வத்தியாயத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

V- அனைத்து வகையான இபாதத்துகளுக்கும் தகுதியானவன், தன்னிகரில்லாத, ஒரே இறைவன் அல்லாஹ் மட்டுமே! இபாதத்துகள் - வணக்கங்கள் என்ற பெயரிலுள்ள, 'ஷிர்க்' மற்றும் 'பித்அத்து'க்களை முழுமையாகத் தவிர்த்திடுக!

VI- ஸிராதுல் முஸ்தகீம் - என்கிற நேர்வழியில், என்றும் நிலைத்து நின்றிட, எப்பொழுதுமே பிரார்த்திக்க வேண்டும்.

VII- 'துஆ'வை எப்போதும், அனைவருக்காகவும் செய்யவேண்டும்.

VIII-தொழுகையில் இமாம், 'ஸூரதுல் பாதிஹா'வை ஓதி முடித்ததும், பின்தொடர்ந்து தொழுபவர்களும் 'ஆமீன்' கூறுக! ஏனெனில் 'மலக்கு'களும் 'ஆமீன்' கூறுகிறார்கள். (புகாரீ: 6402)

## தொடர்பு.. நுட்பமான விரிவுரைகள்

❖ ஸூரா அல்பாதிஹாவில்,''எங்களுக்கு நேர்வழியைக் காட்டுவாயாக''(1:5) என்கிற வார்த்தை வந்துள்ளது. (அடுத்த) அத்தியாயம் அல்பகராவின் துவக்கத்தில் ''பயபக்தி உடையோருக்கு (இக் குர்ஆன்) நேர்வழி ஆகும்.(2:2) - என இடம்பெற்றுள்ளது. ஸூரதுல் பாதிஹாவில், வேண்டப்பட்ட நேர்வழி, திருக்குர்ஆன் வடிவத்தில் வழங்கப்பட்டுவிட்ட குறிப்பு, ஸூரதுல் பகராவின் (ஆரம்பத்தில்) இடம் பெறுகிறது. ஆக கேட்கப்பட்ட 'துஆ' ஏற்கப்பட்டிருக்கிறது.

❖ ஸூரதுல் பகராவில், நேர்வழியை எப்படி அடைவது? என்கிற வழிமுறையும் இவ்வாறு விளக்கப்படுகிறது. ''ஆகவே நீங்கள் ஈமான் கொள்வதைப் போல், அவர்களும் ஈமான் கொண்டால், நேர்வழியைப் பெற்றுவிடுவார்கள்.'' (02:137)

❖ 'அல்பாதிஹா' அத்தியாயத்தின், இறுதி வசனத்தில் 'மஃழூபி' மற்றும் 'அழ்ழால்லீன்' என இரு பதங்கள் உள்ளன. அடுத்தடுத்து வருகின்ற அத்தியாயங்களோடு, இந்த இரண்டு சொற்றொடர்களுக்கும், ஆழமான தொடர்பு இருக்கிறது. ''அது உன் கோபத்திற்காளானோர் (மஃழூபி) வழியுமல்ல; வழிதவறியோர் (அழ்ழால்லீன்) வழியுமல்ல.'' (1:7)

- 'ம.்.ழூபி' - உதாரணமாக இது யூதர்கள் (பற்றிய பதம்). 'ஸூரா அல்பகரா மற்றும் அந்நிஸாவில், யூதர்கள் அதிகமாகக் குறிப்பிடப் படுகிறார்கள்.
- 'அழ்ழால்லீன்' - உதாரணமாக இது கிறித்தவர்கள் (பற்றிய பதம்). 'ஸூரா ஆலு இம்ரான்' மற்றும் 'அல்மாயிதா' வில், கிறித்தவர்கள் அதிகமாகக், குறிப்பிடப் படுகிறார்கள்.

❖ 'அல்பாதிஹா' முதல் 'ஸூரா'வாகக் கொண்டு வரப்பட்டதேன்? ஒரு சட்டத் தொகுப்பில், முன்னுரை (Preamble) பெற்றுள்ள முக்கியத்துவத்தை விட, அதிகமான முக்கியத்துவத்தையே, 'ஸூரதுல் பாதிஹா' பெற்றுள்ளது.

❖ சரித்திரத்தில், 'அல்பாதிஹா'வின் விஷயத்தில் 'உலமா'க்கள், அதிகமான அக்கறையும், போதிய முயற்சியும் மேற்கொண்டுள்ளார்கள். மௌலானா அபுல்கலாம் ஆஸாத், அவர்கள் 'உம்முல் கிதாப்' என்கிற கனமான நூலைத் தொகுத்துள்ளார்கள். அஷ்ஷைக் அப்துர் ரஸ்ஸாக் அல்பத்ர் அல் அப்பாத் (ரஹ்) அவர்கள், 'மின் ஹிதாயாதி ஸூரதில் பாதிஹா' என்கிற நூலைத் தந்துள்ளார்கள். இதே போல், இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள், தன் 'மதாரிஜுஸ் ஸாலிகீன்', என்கிற தொகுப்பில் ஸூரதுல் 'பாதிஹா'விற்காகத் தனியொரு பாகத்தை ஒதுக்கியுள்ளார்கள். இமாம் ஸுயூத்தி (ரஹ்) அவர்களோ, 'பராஅதுல் இஸ்திஹ்லால்' (அழகிய ஆரம்பம்) என்கிற அழகான பெயரில், ஒரு நூலை எழுதி, இந்த ஸூரா ஏன் உம்முல் கிதாப்? (வேதத்தின் தாய்) எனப்படுகிறது, என நிறுவியுள்ளார்கள். நெடிய தப்ஸீர் கிரந்தங்கள் அனைத்திலும், இந்த அத்தியாயத்திற்காகக் குறிப்பிட்ட இடம் தரப்பட்டுள்ளது.

❖ வாருங்கள்! திருக்குர்ஆனின் துவக்கத்தை நோக்குவோம்..! அரபிக் கவிதைகளில் போட்டிக் கவிதைகளுக்கு மிக்க வரவேற்பு இருந்தது. அரேபியர்கள் - குதிரைகள், அழிந்த நகரத்தின் எச்ச சொச்சங்கள், மாளிகைகள், பிரியமானவளின் பெருமை.. எனப் பேசுவதில், சலிப்படைய வில்லை. இருந்தாலும் படைத்தவனைப் பற்றிய அறிவை, அப் படைப்புகளில் இருந்து பெறுவதில் அவர்களால், வெற்றி பெற முடியவில்லை. இந் நிலையில் (இந்த) ஓர் உண்மையை விளக்க, திருக்குர்ஆன் ஆரம்பத்திலேயே, பின்வரும் கேள்வியை எழுப்புகிறது: 'படைப்புகளை யெல்லாம் பார்த்த பின்பும், ''எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே'' (1:1)என ஏன் சொல்லாமல் இருக்கிறீர்கள்?'. அதாவது திருக்குர்ஆனில், எடுத்த எடுப்பிலேயே, 'படைப்புகளைச் சிந்தித்திடுக! அதன் மூலம் படைத்தவனை (அறிந்து) நம்பிக்கை கொள்க!! இயற்கையின் எதிர்பார்ப்பு இதுவே!!!' என்று பாடம் நடத்தப் படுகிறது.

❖ 'ஸப்வுல் முஅல்லகாத்', பற்றி ஒரு சொல்:- சீரிய – சிறப்பான

வர்ணனைகளால், மக்களின் மனங்கவர்ந்த கவிதைகள், பொதுவாகக் 'க.்.பா' வில் தொங்கவிடப் பட்டன. இவ்வாறாக 'ஸப்வுல் முஅல்லகாத்' கவிதைகளும் அங்கே அரங்கேறின. ஒரு கவிஞன், எந்த அழகின் காரணமாக (ஒன்றைப்) புகழுகின்றானோ, அவ்வழகு அனைவருக்குமே, கூட்டு ரசனையின் (பொதுவான) மையமாக விளங்க வேண்டும் என்பது, கட்டாயமன்று. அதே சமயம், திருக்குர்ஆனிலோ, ஆரம்பம் முதல் இறுதிவரை கூறப்பட்டுள்ள அனைத்துமே, மனித இயல்பிற்கேற்ற குரலாகவும், எதிர்பார்ப்பாகவும் திகழுகின்றன.

❖ ஸூரதுல் இக்லாஸில், அல்லாஹு தஆலா, நபி (ஸல்) அவர்கள் மூலமாக, ''சொல்க..! (குல்)'' எனக் கூறி – தன்னை அறிமுகப் படுத்தச் சொல்கிறான். 'ஸூரதுல் பாதிஹாவிலோ' - அல்லாஹ், தன் அறிமுகத்தைத் தானே தருகிறான். இது, படைப்புகள் அல்லாஹ்வை நேரடியாக (Direct) அறிந்திட, 'அல்லாஹ்வே' அவர்களைக் கோருவது போல் உள்ளது. இயற்கையின் இந்த முக்கியமான எதிர்பார்ப்பு, மிகப் பரிபூரணமான வழியில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

❖ எப்படி..? குதிரைகள் மற்றும் இதர பொருள்களின் சிறப்பம்சங்களை, உணர்ந்திருந்தவர்களிடம், ''அச்சிறப்பம்சங்களைப் படைத்தவன் 'அல்லாஹ்'தான்; (எனவே) அவன் மட்டுமே (உண்மையான) புகழ்ச்சிக்கும், வணக்க வழிபாட்டிற்கும் தகுதியானவன்'' (மற்றவைகளுக்கு வணங்கப்படும் தகுதி இல்லை) என்கிற மகத்தான செய்தி, சொல்லப் படுகிறது.

❖ அன்றைய நியூட்டன் (இம்ரவுல் கைஸ்), நவீன இம்ரவுல் கைஸ் (நியூட்டன்) மற்றும் அவர்கள் வழிநடப்போர், யாவரும் மேலே குறிப்பிட்ட அந்தத் தவறையே, செய்கிறார்கள். அதாவது படைப்புகள் பற்றி சிந்தித்து, அவைகளுக்குப் பின்னால் இருக்கின்ற - படைத்தவனைச், சிந்தித்தறிய தவறி விட்டார்கள்!. கீழே விழுந்த ஆப்பிள் (Apple), கண்ணுக்குத் தெரியாத புவியீர்ப்பு சக்தியைச் (Gravity) சொல்ல வைத்தது. ஆனால் அந்த ஆப்பிளையும், புவியீர்ப்பு சக்தியையும் படைத்த (இறை)வனை, எண்ணிப் பார்க்க, அவர்கள் மறந்து விட்டார்கள். அவ்வாறே குதிரையின் வர்ணனைகளில், நனைந்து திளைத்த கவிஞர்களுக்கு, குதிரையின் தன்மை நினைவுக்கு வந்தது; அல்லாஹ்தான் அதனைப் படைத்தான் என்பதும் (ருபூபிய்யஹ்) சிறிது நினைவுக்கு வந்தது! ஆனால் உண்மையான ஏகத்துவம், அதாவது படைத்தவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன், என்பதை, (உலூஹிய்யஹ்) மறந்தே விட்டார்கள்.

❖ 'ஸூரதுல் பாதிஹா', கடவுளை மறுப்போருக்கும்(Athiest), கடவுளைச் சந்தேகிப்போருக்கும் (Agnostic) மறுப்பைத் தருகிறது. படைப்புகளை ஆய்வு செய்வதன் மூலம், அசல் படைப்பாளனை

அறியலாம்! இதையே, உண்மையான ஆய்வு மற்றும் கண்டுபிடிப்பாகச் (Complete discovery) சொல்கிறார்கள். அதே சமயம், இன்றைய அறிவியலின் ஆய்வும் கண்டுபிடிப்பும், அரை குறையானதாகவே (Incomplete discovery), இருக்கிறது; படைப்புகளை ஆய்வு செய்வதில் மாத்திரம், மூழ்கிப்போய் உள்ளது. படைத்தவனை ஆய்ந்தறிந்து, அறிமுகப்படுத்த (Discovery) அறிவியலால், இயலவில்லை.

'சூரியக் கதிர்களைச் சிறை பிடித்தார்கள் - வாழ்க்கையின் இருள் போக்க ஒளி தரவில்லை'.

இந் நூலாசிரியருடைய மார்க்கப் பணி மற்றும் அழைப்புப் பணியின் போது, அவரகள் கண்ட அனுபவம் (அவர்களுடைய வார்த்தைகளில்) இதோ:- ''அழைப்புப் பணிக்கான களத்தில், இந்த அத்தியாயத்தையும், ஆயதுல் குர்ஸியையும், எளிய முறையில், தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், பயன்படுத்த முடியும். கடந்த பத்து வருடங்களாக, டி.வி.சேனலில், இலட்சக் கணக்கான மற்றும் கோடிக்கணக்கான மக்களிடத்தில், இறை செய்தியைக் கொண்டு சென்று, சேர்ப்பதற்கு அல்லாஹ் எனக்கு வாய்ப்பளித்திருக்கின்றான். 'ஸூரதுல் பாதிஹா' மற்றும் 'ஆயதுல் குர்ஸி' மூலமாக அகீதா – கொள்கையைத் திருத்துகின்ற பாக்கியத்தையும் அல்லாஹ் எனக்கு வழங்கினான். அல்ஹம்து லில்லாஹ்..!''

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

### திருக்குர்ஆன்

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

அல்பாதிஹா : பொருள்: ''(யா ரப்பே!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடம்தான், உதவியும் தேடுகிறோம்.''

### அல்ஹதீஸ்

முஆத் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு தடவை நான் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால், வாகனத்தில் அமர்ந்து இருந்தேன். எனக்கும் நபி (ஸல்) அவர்களுக்கும் இடையில், சேணத்துடன் இருந்த சாய்வுக்கட்டையைத்

தவிர வேறேதுவும் எங்களிடையே இருக்கவில்லை. அப்போது நபி (ஸல்) அவர்கள், முஆதே! என என்னை அழைத்தார்கள். 'இறைத்தூதர் அவர்களே! கீழ்ப்படிந்து காத்திருக்கிறேன்' என்றேன் நான். மீண்டும் நபி (ஸல்) அவர்கள், முஆதே! என என்னை அழைத்தார்கள். 'இறைத்தூதர் அவர்களே! கீழ்ப்படிந்து காத்திருக்கிறேன்' என்றேன் நான். மறுபடியும், நபி (ஸல்) அவர்கள், முஆதே! என என்னை அழைத்தார்கள். 'இறைத்தூதர் அவர்களே! கீழ்ப்படிந்து காத்திருக்கிறேன்' என்றேன் நான். ''அடியார்கள் மீது, அல்லாஹ்விற்கு இருக்கின்ற உரிமை என்னவென்று நீர் அறிவீரா?'' என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். அதற்கு நான், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் மிக அறிந்தோர் என்றேன்.அதற்கு நபி (ஸல்)அவர்கள்,''அடியார்கள் அல்லாஹ்வை மட்டும் வணங்கவேண்டும்; அவனுடன் எதையும் கூட்டாக்கக் கூடாது'' என்பதே அல்லாஹ்வின் உரிமை என்றார்களள. பிறகு சிறிது நேரம் கழிந்தது. நபி (ஸல்) அவர்கள், மீண்டும் யா முஆத் பின் ஜபல்! என என்னை அழைத்தார்கள். 'இறைத்தூதர் அவர்களே! கீழ்ப்படிந்து காத்திருக்கிறேன்' என்றேன் நான். ''அடியார்கள் இதனை நிறைவேற்றினால், அல்லாஹ்வின் மீதுள்ள அடியார்களின் உரிமை என்னவெனத் தெரியுமா?'' எனக் கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் மிக அறிந்தோர் என்றேன். அதற்கு நபி (ஸல்)அவர்கள்,''அவ்வடியார்களை அல்லாஹ் வேதனைப்படுத்தாமல் இருக்கவேண்டும்' என்பதே அல்லாஹ்வின் மீதான மக்களின் உரிமை'' என்றார்கள். (ஸஹீஹுல் புகாரீ – 6500)



# سُوْرَةُ الْبَقْرَةِ

## ஸூரதுல் பகரா
## பசுமாடு

2

இது ‘மதனீ’ ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள
### *Few Objectives*

- இந்த அத்தியாயத்தின் நோக்கம், ‘இஸ்லாமிய ஷரீஅத்தும் அதைப் பிரயோகிப்பதும்’ என்பதாகும். அல்லாஹ் மற்றும் அவன் தூதர் (ஸல்) அவர்களுடைய போதனைகளை, இப் பூமியில் பிரயோகிப்பதற்காக என்னென்ன சட்டங்கள் தேவையோ – அத்தனைச் சட்டங்களும் இந்த ஸூராவில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. 1
- (அல்லாஹ்வால்) இறக்கப்பட்டுள்ள (முநஜ்ஜல்) இஸ்லாத்தை ஏற்று அதன்படி நடப்பவர், வெற்றியைப் பெறுவார். மாற்றப்பட்டுள்ள (முபத்தல்) இஸ்லாத்தைப் பின்பற்றுகிறவர் தோல்வி அடைவார்.
- மார்க்க அடிப்படையில் தகுதியற்ற மனிதர்களுக்கு, பனூ இஸ்ராயீல்களில் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தினர், உதாரணமாக உள்ளார்கள். அதே சமயம் இப்றாஹீம் (அலை) அவர்களும், அவர்களைப் பின்பற்றியோரும் தகுதி மிக்க மக்களுக்கு, உதாரணமாகத் திகழுகிறாரகள். 2
- இவ்வத்தியாயம், வழிபாடு மற்றும் நடைமுறைகளுடன் சமூகம், குடும்பம், பொருளாதாரம், ஒழுக்கம் என எல்லா விஷயங்களையும் உள்ளடக்கியுள்ளது. 3
- இது நபி(ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தது முதல், அவர்களின் மரணம் வரை பல்வேறு தொடர்களாக இறங்கியது.
- நபி (ஸல்) அவர்கள் காட்டிய பாதையில், ஸஹாபாக்களின் வழிமுறையில் சென்றால் அல்லாஹ் இப்புவியில் வெற்றியை அருள்வான்; இல்லையேல் இல்லை. 4
- இந்த ஸூராவின் ஒரு பகுதியில், சரித்திரத்தில் இடம்பெற தகுதியுடையோர் மற்றும் தகுதி இல்லாதோர் பற்றிச் சொல்லப்படுகிறது. இரண்டாம் பகுதியில் எந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் செயல்பட்டால் மனிதன் தகுதிமிக்கவன் ஆவான், எனச் சொல்லப் படுகிறது. 5
- நேரான பாதையில் நிலைகொண்டோர்.., உதாரணமாக (ஆதம் (அலை), இப்றாஹீம் (அலை), யஃகூப் (அலை), அவர்களின் சந்ததியினர்) மற்றும் நேரான பாதையில் நிலைகொள்ளாதோர்..,

---

1. வசனம் 30 தப்ஸீர் இப்னு கஸீர் பக்கம் 216 – தப்ஸீர் அல்மனார
2. இக்திளாவுஸ் ஸிராதில் முஸ்தகீம் - இப்னு தைமிய்யா , கண்டிப்பாகப் படியுங்கள்
3. அள்வாவுல் பயான்
4. குர்துபி (ரஹ்) கூறினார்கள்: ‘இது மதனீ அத்தியாயம்; பல சந்தர்ப்பங்களில் அருளப்பட்டது.
5. தப்ஸீர் அல்மனார

உதாரணமாக (பனூ இஸ்ராயீல்களில் அவிசுவாசிகள்),- என சரித்திர உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.

- ❖ ஸிராதுல் முஸ்தகீம் - நேரான பாதையில் உறுதியாக நிலைபெற வேண்டுமெனில் கொள்கை மற்றும் சட்டங்களின் பார்வையிலே, ‘பின்பற்றுதல்’ இஸ்லாத்திற்கேற்ப இருப்பது, ஷர்த் - நிபந்தனையாகும். 1
- ❖ மனித நேயத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இஸ்லாமிய ஷரீஅத் - சட்டமே தீர்வைத் தருகிறது. 2
- ❖ ஸூரா பகரா வின் ஒரு பகுதி அழைக்கப்படவேண்டிய சமுதாயத்திற்கு (உம்மதே த.்.வஹ்) உரியது. ஸூரா பகரா வின் மறு பகுதி, இஸ்லாத்தை ஏற்ற சமுதாயத்திற்கு (உம்மதே இஜாபத்) உரியது. 3
- ❖ மகத்தான இரு வசனங்களோடு இவ்வத்தியாயம் முடிக்கப் பட்டுள்ளது. இவ்விரு வசனங்களும் மி.்.ராஜின் போது அன்பளிப்பாக வழங்கப்பட்ட வசனங்கள்; அர்ஷின் பொக்கிஷமும் ஆகும். (ஸஹீஹுல் ஜாமி.். :1060)

## சில தலைப்புகள்
## *Few Topics*

1- திருக்குர்ஆன் உண்மையில் ‘அல்லாஹ்’-வால், அருளப்பட்டதாகும். நேர்வழியைக் காட்டும் வேதமுமாகும். (1-2)

2- மு.்.மின்களின் தன்மைகளும், அவர்களுக்கான நற்கூலியும் (3-5)

3- காபிர்கள் மற்றும் நயவஞ்சகர்களின் சில தன்மைகளும், ‘முனாபிக’-களுக்காக இரு உதாரணங்களும் சொல்லப் பட்டுள்ளன. (06-20)

4- அல்லாஹ்வை வணங்குவதற்கான உத்தரவு,அல்லாஹ்வின் மகத்துவம், மற்றும் ஏகத்துவ விளக்கம் (21-22)

5- திருக்குர்ஆனைப் போல், இன்னொரு வேதத்தைக் கொண்டு வருக! எனக் காபிர்களிடம் சவால். (23)

6- காபிர்களுக்கு நரகத்தைப் பற்றிய எச்சரிக்கையும் நரகத்தின் தன்மைகளும். (24)

7- இறை விசுவாசிகளுக்கு சுவனம் பற்றிய நற்செய்தியும், சுவர்க்கம் பற்றிய வர்ணனைகளும். (25)

---

1. அல்புர்ஹான் பி தனாஸுபி ஸுவரில் குர்ஆன் - அல் கர்னாதீ : பக்கம் 88
2. அல்அத்இமஹ் - அஷ்ஷைக் அல்பௌஸான்
3. தப்ஸீர் அல்மனார் - பாகம் 1 பக்கம் 107

8- திருக்குர்ஆனில், உதாரணங்கள் சொல்லப்படுவதற்கான காரணங்கள் மற்றும் நயவஞ்சகர்களின் தன்மைகள். (26-27)

9- படைப்புகளில், தவ்ஹீதுல் உலூஹிய்யஹ்,விற்கான காரணங்கள் பற்றிய விபரம்.(28-29)

10- பூமியில், ஆதம் (அலை) கலீபாவாக ஆக்கப்படுதல், அதற்காக மலக்குகள் ஆச்சரியமடைதல், ஆதம் (அலை) அவர்களுக்கு அனைத்துப் பொருள்களின் பெயர்களும் கற்பிக்கப் படுதல். (30-32)

11- அல்லாஹ்வின் அறிவு, அனைத்தையும் சூழ்ந்திருக்கிறது என்பதற்கான ஆதாரம் தரப்பட்டுள்ளது. 'மலக்கு'-களின், 'ஸுஜூத்' மூலம் ஆதம் (அலை) அவர்கள் சிறப்பிக்கப் படுதல். (33-34)

12- ஆதம் (அலை) மற்றும் ஹவ்வா (அலை), இருவரும் சுவரக்கத்தில் தங்கவைக்கப்பட்டுக் கௌரவிக்கப் படுவதும், ஷைத்தான் அவர்கள் மீது பகைமை கொள்வதும், அதனால் ஷைத்தான, சுவனத்தில் இருந்து அவர்களை வெளியாக்கிவிட்டதும். (35-36)

13- ஆதம் (அலை) அவர்களின் 'தவ்பா'(பாவமன்னிப்பு), அவர்கள் சுவனத்தில் இருந்து வெளியாக்கப்படுதல் மற்றும் நேர்வழியைப் பின்பற்றுவோருக்குக் கிடைக்கின்ற வெகுமதி (37-38)

14- அல்லாஹ்வை மறுப்போருக்குக் கிடைக்கும் தண்டனை விபரம்.(39)

15- பனூஇஸ்ரவேலர்களுக்கு, அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகள் மற்றும் இறையச்சம் உடையோரின் தன்மைகள்.(40-48)

16- பனூஇஸ்ரவேலர்களுடன் பிர்அவ்ன் நடந்து கொண்ட விதம்.(49-61)

17- 'மு.ஃ.மின்'கள் பெறுகின்ற பொதுவான நன்மைகள்(62)

18- யூதர்களின் தீய நடத்தைகளும், அதற்காக உலகில் அவர்கள் பெற்ற தண்டனைகளும்.(63-66)

19- பசு மாட்டின் நிகழ்ச்சி தரும் படிப்பினைகள்.(67-73)

20- யூதர்களின் இதயம் இறுகிப் போன விபரம்.(74)

21- இறைவேதத்தில் மாற்றம் செய்த யூதர்கள், அவர்களின் நயவஞ்சகம் மற்றும் தண்டனை விபரம்.(75-81)

22- மு.ஃ.மின்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்.(82)

23- யூதர்களின் ஒப்பந்த மீறல்.83-86

24- இறைத் தூதர்கள் பற்றிய யூதர்களின் நிலைப்பாடு.(87-91)

25- ஒப்பந்தம் போடப்பட்ட நிலையிலேயே, யூதர்களின் அராஜகம்.(92-91)

26- 'சுவர்க்கம் தமக்கு மட்டுமே' என்ற யூதர்களுக்கு மறுப்பு.(94-96)

27- மலக்குகள் மீது, பகைமை பாராட்டியதால், விளைந்த யூதர்களின் 'குப்ரு' (இறை நிராகரிப்பு) (97-99)

28- யூதர்களின் ஒப்பந்த முறிப்பும் இறைத் தூதர்களைப் பொய்ப்பித்த விபரமும். (100-101)

29- 'சூனியத்தின்' - உண்மை நிலை. (102-103)

30- நபி (ஸல்) அவர்களிடம், யூதர்கள் தவறான முறையில் உரையாடுதல் மற்றும் மு.்.மின்கள் மீது, காபிர்கள் கொண்ட பெறாமை.104-105

31- சில வசனங்கள், மாற்றப் பட்டதற்கான ஆதாரம்.106-108

32- அஹ்லு கிதாப் (வேதம் பெற்றோர்), மு.்.மின்கள் மீது கொண்ட பொறாமையும், இன்னும் அவர்கள் 'மு.்.மின்'களுடன் அவர்களின் போட்டியும். (109-110)

33- யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் நம்பிக்கைகளுக்கு மறுப்பு. (111-113)

34- இறை இல்லங்களில் அக்கிரமம் செய்வதற்குத் தடை; (பூமியில்) எந்த இடத்தில் தொழுதாலும், தொழுகை நிறைவேறும் விபரம். (114-115)

35- வேதம் பெற்றவர்கள் தம்மைத் தாமே அல்லாஹ்வின் பிள்ளைகள் என காட்டிக் கொண்டதன் விபரம். (116-118)

36- முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவம் பற்றிய விபரம். கூடவே யூதர்களையும் கிறித்தவர்களையும் பின்பற்றும் முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படும் விபரம். (119-121)

37- பனூஇஸ்ரவேலர்கள் மீது, அல்லாஹ் புரிந்த அருட்கொடைகள் மற்றும் மறுமை நாளைக் கொண்டு அல்லாஹ் அவர்களை அச்சுறுத்துவது. (122-123)

38- இபுறாஹீம் (அலை) அவர்கள் சோதிக்கப்பட்ட நிகழ்வு, க.்.பா'வை (அடித்தளத்தைக்) கட்டியெழுப்புதல், அதன் பின் 'துஆ' செய்தல், மற்றும் மக்கா-வின் சிறப்பு பற்றிய விபரம். (124-129

39- இப்றாஹீம் (அலை) அவர்களின் வழிமுறையைப் புறக்கணிப்பதால் ஏற்படும் இழப்பு மற்றும் அவர்களின் வழிமுறையைக் கடைபிடிப்பதாகக் கூறிய யூதர்களுக்கு மறுப்பு. (130-141)

40- 'கிப்லா' மாற்றம்பற்றிய விபரமும், யூதர்களின் எதிர்வினையும். (142-145.)

41- 'ரஸூல்' (ஸல்) அவர்களைப் பற்றிய தன்மைகள் குறித்த அறிவை, மறைத்த யூதர்கள் பற்றிய விபரம். (146-147)

42- தொழுகையில், 'க.்.பா' வை முன்னோக்கித் திரும்புதல் கட்டாயம் என்கிற விபரமும் அதன் காரணமும். (148-150)

43- நபி (ஸல்) அவர்கள் கண்ட இயக்கம். (151)

44- பொறுமை மற்றும் அதன் கூலி – சோதனைகளுடைய வகைகள். (152-157)

45- ‘ஸபா’ – ‘மர்வா’ இடையே ‘ஸயீ’ - தொங்கோட்டம் ஓடுதல்.158

46- கல்வியை மறைப்பதற்கான தண்டனை; குப்ரு - இறை நிராகரிப்பில் மரணிப்போர் பற்றிய சட்டம். (159-162)

47- அல்லாஹ்வின் தனித்துவம் மற்றும் அவனுடைய வல்லமை வெளியாகும் இடங்கள் குறித்த விபரம். (163-164)

48- மறுமை நாளில், முஷ்ரிகீன்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுவோர் தங்கும் இடம் பற்றிய விபரம். (165-167)

49- தூய - ஹலால் உணவை உண்ண, ஷைத்தானிடம் இருந்து தப்பிக்க, இன்னும் ஷைத்தானை எதிரியாகக் கருதிட விளக்கம். (168-169)

50- கண்மூடிப் பின்பற்றுதல் - விளக்கம். (170)

51- ‘குப்பார்’ - காபிர்களுக்கான உதாரணம் தரப்பட்டுள்ளது. (171)

52- கட்டாயமான தூய உணவு, அதற்காக நன்றி செலுத்துதல், மற்றும் தடை (172-173)

53- கல்வியை மறைப்பதற்கான தண்டனை. (174-176)

54- ‘பிர்ரு’ - நன்மை பற்றிய எதார்த்தம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. (177)

55- பழிவாங்கல் (அனுமதிக்கப்பட்ட) சூட்சுமம் (178-179)

56- மரண சாஸனத்தின் அவசியமும், அதனை மாற்றுவதற்கான தடை பற்றிய விபரமும். (180-182)

57- இரமலான் மாதமும் - நோன்பின் கட்டாயம் மற்றும் அதன் சிறப்பும் (183-185)

58- ‘துஆ’ - பிரார்த்தனையின், சிறப்பு மற்றும் அதனுடைய நிபந்தனைகள். (186)

59- நோன்பின் இறுதி சட்டங்கள் (187)

60- தவறான முறையில் மக்களின் பொருள்களைச் சாப்பிடத் தடை. (188)

61- பிறை – காலக் கணக்கீடும், ‘நன்மை’ பற்றிய உண்மை நிலையும். (189)

62- அல்லாஹ்-வின் வழியில் யுத்தம் மற்றும் செலவு செய்வது.190-(195)

63- ‘ஹஜ்’ மற்றும் ‘உம்ரா’ வின் சட்டங்கள். (196-203)

64- மு∴மின்கள் - இறை நம்பிக்கையாளர்கள் மற்றும் ‘முனாபிக்கு’கள் - நயவஞ்சகர்களின் தன்மைகள. (204-207)

65- ஷைத்தானைப் பின்பற்றுவதைத் தவிர்ப்பதற்கான உத்தரவும்,

அவனை எதிரியாகக் கருத வேண்டிய விபரமும். (208-210)

66- பனூ இஸ்ராயீல்களின் நிலைமைகள் பற்றிய விபரங்கள் (211)

67- காபிர்களின் உண்மை நிலை மற்றும் இறைவிசுவாசிகளின் மேன்மை பற்றிய விபரம். (212)

68- மக்களுக்கு இறைத் தூதர்களின அவசியமும் அவர்களைப் பின்பற்றுவோருக்கான சோதனைகளும். (213-214)

69- நற்செலவுகளை எங்கெங்கே செலவு செய்யவேண்டும் எனும் விபரம். (215)

70- மார்க்கத்தைப் பாதுகாக்க யுத்தத்தின் அவசியமும், அது குறித்த சில சட்டங்களும (216-217)

71- 'முஜாஹித்' மற்றும் அவர்களுடைய நோக்கம் பற்றிய விபரம்.(218)

72- மது மற்றும் சூதாட்டத்தால் ஏற்படும் கேடுகள்(219)

73- அநாதைகளோடு நல்லுறவைப் பேண உத்தரவு(220)

74- இணைவைக்கும் 'ஆண் - பெண்'களை மணமுடிக்கத் தடையும் அதற்கான காரணமும்.(221)

75- மாதவிலக்கின்போது பெண்களை விட்டும் விலகி இருப்பதற்கான உத்தரவு(222)

76- பின்துவாரத்தில் உறவுகொள்ளத் தடை.(223)

77- அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வதற்கான சட்டங்கள்(224-225)

78- மனைவிக்கு எதிராகச் சத்தியம் செய்வது(ஈலா) பற்றிய சட்டம்.(226-227)

79- 'தலாக்' விடப்பட்ட பெண்ணின் 'இத்தா'(காத்திருப்பு), 'தலாக்'கின் எண்ணிக்கை, மற்றும் தலாக்கின் சட்டங்கள் விபரம்.(228-230)

80- 'தலாக்' விடப்பட்ட பெண்களுடன் நல்லவிதமாக நடத்தல்.(231-231)

81- பாலூட்டல் பற்றிய சட்டங்கள் மற்றும் பாலூட்டும் பெண்ணிற்கான செலவு, தந்தையின் மீது கட்டாயமாகும் எனும் விபரங்கள்.(233)

82- ஒரு விதவைப் பெண்ணின் 'இத்தா'(காத்திருப்புக் காலம்),பற்றிய விபரம்.(234-235)

83- தாம்பத்திய உறவிற்கு முன் 'தலாக' விடப்பட்ட பெண்ணின் உரிமைகள்.(23-237)

84- தொழுகையைப் பேணித் தொழுது வருதல்.(238-239)

85- விதவை மற்றும் 'தலாக்'விடப்பட்ட பெண்களுக்கான சில சட்டங்கள்.(240-242)

86- முந்தைய சமுதாயத்தின் நிலை மற்றும் கோழைத் தனத்தின்

கேடு.(243)

87- ‘அல்லாஹ்’-வின் பாதையில் ‘ஜிஹாத்’ மற்றும் செலவு செய்வோரின் சிறப்பு.(244-245)

88- பனூ இஸ்ராயீல்களின் நிலைகள்,‘தாலூத்’ மற்றும் ‘ஜாலூத்’ நிகழ்ச்சிகள்.(246-252)

89- இரஸூல்மார்களின் அந்தஸ்துகள், மற்றும் மனிதர்களிடையே உள்ள முரண்பாடுகளுக்கான காரணம்.(253)

90- இறைவழியில் செலவு செய்வதன் அவசியம், அவ்வாறு செலவு செய்யாதவர்களுக்கான எச்சரிக்கை - அத்துடன் மறுமை நாளின் தன்மைகள் பற்றிய விபரங்கள்.(254)

91- ஆயதுல் குர்ஸீ – குர்ஆனில் இடம்பெற்றுள்ள வசனங்களில் மிகவும் மகத்துவமுள்ள இறை வசனம். (255)

92- மார்க்கத்தில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை. அதே சமயம் அதைப் பற்றிப்பிடிப்போர், அறுந்திடவே செய்யாத உறுதியான கயிற்றைப் பிடித்தவர் போலாவார். (256)

93- ‘மு.்.மின்’களின் நண்பன் ‘அல்லாஹ்’; ‘காபிர்’களின் நண்பன் ஷைத்தான். மேலும் ‘மு.்.மின்’கள் மற்றும் ‘காபிர்’களின் இடையே உள்ள வித்தியாசம்.(257)

94- நம்ரூத் மற்றும் இப்றாஹீம் (அலை) அவர்களின் நிகழ்ச்சி.(258)

95- உஜைர் (அலை) அவர்களின் சரித்திரம் - இவர்களை ‘அல்லாஹ்’ மரணிக்கவைத்தான்.பிறகு நூறு ஆண்டுகள் கழித்து உயிர் கொடுத்தான். இதனால் ‘அல்லாஹ்’, இறந்தவர்களை மீண்டும் எழுப்ப, ஆற்றல் கொண்டவன், என்பது நிரூபணமாகிறது.(259)

96- நபி இப்றாஹீம் (அலை) அவர்கள், ‘அல்லாஹ’விடம், மரணிப்பவர்களை உயிர்ப்பிப்பது எப்படி? என்பதைக் காண விடுத்த வேண்டுகோளும், - அந்நிகழ்வு பற்றிய விபரமும்.260

97- இறைவழியில் செலவு செய்வோருக்கான உதாரணம், மற்றும் அதன் சட்டங்கள்.(261-268)

98- ‘அல்லாஹ்’- வின் வாக்குறுதிகள் உண்மையானவை; ஷைத்தானின் வாக்குறுதிகளோ பொய்யானவை.(268-269)

99- பகிரங்கமான மற்றும் இரகசியமான தர்மங்களும் அவைகளுக்கான நற்கூலியும்.(270-271)

100-தர்மங்களைப் பெறத் தகுதியுடையவர்கள், மற்றும் தர்மத்திற்கான கூலியின் விபரம்.(285 – 286)சில

## பாடங்கள் - *Lessons*

1. மனிதன், பூமியில் 'அல்லாஹ்வின் பிரதிநிதி' என்கிற கொள்கைக்கு, திருக்குர்ஆனில் எங்குமே ஆதாரம் இல்லை.
2. பனூ இஸ்ராயீல்கள் செய்த தவறுகளை, முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தினர் செய்யக்கூடாது என்பதற்காக அத்தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.(40-104)
3. சமூகத்தைச் சீர்படுத்துவதற்கான திட்டங்கள் தரப்பட்டுள்ளன.(179,180,183,195)
4. இந்த அல்-பகரா அத்தியாயம் ஓதப்படும் வீட்டிலிருந்து ஷைத்தான் ஓடிவிடுவான்.(முஸ்லிம்:804)
5. அழைப்புப் பணியின்போதும், சமூக சீர்திருத்தத்தின்போதும், 'ஷிர்க'கின் முனையை முறித்தெறிய, ஆயதுல் குர்ஸியைப் பயன்படுத்தலாம்.
6. உண்மையான இறைவன் 'அல்லாஹ்' மட்டுமே என்கிற வாதம் முன்வைக்கப்படுகிறது. அதற்காக 12 காரணங்கள் தெளிவாக்கப்படுகிறன.

اللَّهُ لا إِلَهَ إِلاَّ هُوَ(١) الْحَيُّ(٢) الْقَيُّومُ (٣)لا تَأْخُذُهُ سِنَةٌ وَلا نَوْمٌ(٤)
لَهُ مَا فِي السَّمَوَاتِ وَمَا فِي الأَرْضِ(٥) مَنْ ذَا الَّذِي يَشْفَعُ عِنْدَهُ إِلاَّ بِإِذْنِهِ(٦)
يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ (٧-٨) وَلا يُحِيطُونَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ إِلاَّ بِمَا شَاءَ (٩)
وَسِعَ كُرْسِيُّهُ السَّمَوَاتِ وَالأَرْضَ(١٠)وَلا يَئُودُهُ حِفْظُهُمَا(١١)وَهُوَ الْعَلِيُّ(١٢) الْعَظِيمُ

7. யாருடைய உள்ளத்தில் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகிறானோ, அவர்கள் என்றுமே நேர்வழியை அடையமாட்டார்கள்.
8. ஈமான் என்பது, வாய்மொழியாக உறுதியளிப்பது மட்டுமல்ல. மாறாக, உள்ளத்தில் உறுதி கொண்டு, உடல் உறுப்புகளால் செயல்படுத்துவதன் பெயராகும்.
9. 'காபிர்' (நிராகரிப்போ)ருக்காக உருவாக்கப்பட்டுள்ள நரகம், தயாராக உள்ளது.
10. நேர்வழியைத் தருவதும், வழிதவற வைப்பதும், அல்லாஹ்-வின் கையில் மட்டுமே உள்ளது. இருந்தாலும், அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டுவான் எனும் விபரம், திருக்குர்ஆனில் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது. நேர்வழியை வேண்டிப் பெறத் துடிப்போருக்கு 'ஹிதாயஹ்' எனும் நேர்வழியைத் தருகிறான். தீயவர்களுக்கும், திருந்தாதோருக்கும், 'அல்லாஹ்' நேர்வழியைக் காட்டமாட்டான்,

وَمَا يُضِلُّ بِهِ إِلاَّ الْفَاسِقِينَ 2:26 - وَيَهْدِي إِلَيْهِ مَنْ يُنِيبُ - 42:13
فَلَمَّا زَاغُوا أَزَاغَ اللَّهُ قُلُوبَهُمْ وَاللَّهُ لا يَهْدِي الْقَوْمَ الْفَاسِقِينَ 61:05

11. நேர்வழி மற்றும் வழிகேட்டிற்கான தீர்ப்பு, நீதி,நேர்மையின் அடிப்படையில் செய்யப்படுகிறது. அநியாயமாக செய்யப்பட மாட்டாது. ஏனெனில் ஸூரா இன்ஸானில்,இடம் பெற்றுள்ளதைப் போல், மனிதன் நன்மையைச் செய்வதற்கும், தீமையைச் செய்வதற்கும் ‘அல்லாஹ்’ சுதந்திரம் தந்துள்ள போது, அநியாயம் எப்படி (நிகழும்?).( 76:03)
12. மறைவானவைகளை அல்லாஹ் மட்டுமே, அறிகிறான்.
13. மனிதர்களைப் போல், ஜின்களும் இஸ்லாமிய சட்டதிட்டங்களை (‘ஷரீஅத்’தை)ப் பின்பற்றப் பணிக்கப்பட்டவர்கள் ஆவர்.)
14. வெளிப்படையானவைகளை அடிப்படையாகக் கொண்டே, உலகியல் சட்டங்கள் பிரயோகிக்கப்படும். ஏனெனில் அந்தரங்கத்தை ‘அல்லாஹ்’ மட்டுமே அறிவான்.
15. நடைமுறைச் செயல்பாடுகளில், தடைக்கான ஆதாரம் வரும்வரை எந்த ஒன்றும் ஹலாலாகவே கருதப்படும்.
16. உள்ளத்தில் உறுதிகொள்வதும் உண்மைப் படுத்துவதும், ஈமானின் உன்னத நிலையாகும். மறுமை வெற்றிக்கான உத்தரவாதம் உறுதி கொள்வோருக்கே உண்டு.
17. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது, கட்டாயமானது. அதை முறிப்பவன், ‘அல்லாஹ்’விடம் ‘பாஸிக்’ (தீயவனாகக்) கருதப்படுகிறான்.
18. பொய்யின் தீமை விளக்கப்படுகிறது. இதனால் ஒருவன் பொய்யனாகப் பதிவு செய்யப்படுகிறான்.
19. கொலையும், இரத்தம் சிந்துவதும் ‘ஹராம்’ ஆகும். மலக்குகளும் அதன் தீமையை விளக்குகிறார்கள்.
20. தற்பெருமையின் முடிவு மிகக் கெட்டது. அதற்கான முதல் உதாரணம் இப்லீஸ் ஆவான்.
21. கல்வியைத் தேடுவதில் ஒழுங்குமுறை அவசியம்; மனிதன், (ஒன்றை) அறியாத பட்சத்தில், அவன் அதனைப் படைத்தவனோடு தொடர்பு படுத்தி - ‘அல்லாஹ் மிக அறிந்தவன்’ எனச் சொல்ல வேண்டும்.
22. பாவங்களில் ஈடுபடுவது அநியாயம் ஆகும்.
23. ‘தக்வா’ - இறையச்சம், நன்மையான அனைத்திற்கும் திறவுகோல்.
24. ‘தாயீ’ - இறை அழைப்பாளரின் பணி, படித்துக் காட்டுவது அல்லது (செய்தியை) சேர்ப்பிப்பது மட்டுமே! நேர்வழி அல்லாஹ்வின் கையில் உள்ளது.
25 இதயம் அனைத்து உறுப்புகளுக்கும் தலையாயது ஆகும். அது

சீர்பட்டுவிட்டால், உடல் முழுவதும் சீராக இருக்கும்.

26. 'நிபாக்' - நயவஞ்சகம், முஸ்லிம் சமுதாயத்திற்கு அனைத்தையும் விட அபாயகரமான எதிரி ஆகும்.
27. பிறரை ஏமாற்றுவோர், அதன் விளைவைச் சந்தித்தே ஆகவேண்டும்.
28. பின்வருபவை நயவஞ்சகர்களின் அடையாளங்கள்: ஏமாற்றுதல், பரிகாசம் செய்தல், பூமியில் குழப்பம் செய்தல், சீர்திருத்தம் செய்வதாக, வெறுமனே முழங்குதல், (மறுமையை மறந்து) ஏனோ தானோ என்று வாழுதல்.
29. மார்க்கத்தை நோக்கிய, அழைப்பை அனைவருக்குமே விடுக்க வேண்டும்; 'முனாபிக்'-களைச் சீர்திருத்த அவர்களையும்கூட (சத்திய மார்க்கத்தின்பால்) அழைக்க வேண்டும்.
30. அல்லாஹ், தீயவர்களில் இருந்து நல்லோரைப் பிரித்தறிய, அடியார்களைத் தன் அத்தாட்சிகள் மற்றும், தன் சட்டங்கள் மூலமாகச், சோதிக்கிறான்.
31. ஷைத்தான் ஆதம் (அலை) அவர்களுக்கும், அவர்களின் சந்ததியினருக்கும் எதிரியாக உள்ளான்.
32. அல்லாஹ்வின் உத்தரவால், 'மலக்கு'-கள் ஆதம் (அலை) அவர்களுக்கு, 'ஸஜதா' செய்தார்கள் எனில் இது கல்விக்குக் கிட்டிய சிறப்பே.
33. ஆண் - பெண் என இருபாலாருக்காகவும் உள்ள மார்க்கம் இஸ்லாம். இரு சாராரிடமுமே விசாரணை உண்டு.
34. ஒவ்வொரு மனிதனும் (தமக்கான) கேள்விகளுக்கு (த் தாமே) பொறுப்பேற்கவேண்டும்.
35. யூதர்கள், கிறித்தவர்கள் இருவருமே இறுதித் தூதர், முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளவேண்டும்.
36. உலகத்தைப் பெறும் நோக்கில், மார்க்கக் கல்வியைக் கற்பது 'ஹராம்' ஆகும்.
37. கல்வியை மறைப்பது மிகப்பெரிய பாவம் ஆகும்.
38. 'குஷூ.:' - உள்ளச்சம் இதயம் சார்ந்த ஓர் 'அமல்' - வழிபாடு ஆகும்.
39. நன்மையை ஏவி, அதனைக் கடைபிடிக்காதவருக்கு, தண்டனைக்கான எச்சரிக்கை இருக்கிறது.
40. குறைவான கல்வியின் முன்னிலையில் ஆலிம்(கல்வியாளர்) உடைய பொறுப்பு அதிகமானது ஆகும்.
41. தொழுகை, சிறிய மற்றும் பெரிய காரியங்களில், உதவிகரமானதாக இருக்கும்.
42. 'இதாஅஹ்' - கட்டுப்பட்டு நடப்பது கடினமாக இருப்பது, விசுவாசமின்மையின் அடையாளம்.

43. நன்மை-யின் போது நன்றி செலுத்தி, கஷ்டத்தின் போது பொறுமை காட்டும் இறையடியான் உயர்வான அந்தஸ்துக்களை அடைவான்.
44. அனைத்திலும் மிகப் பெரிய பாவம், 'ஷிர்க்' (இணைவைத்தல்) ஆகும்.
45. அல்லாஹ்-தான் சிறப்பும் கிருபையும் உடையவன்; (நம்)உணவு இருப்பதும் அவனுடைய கரங்களில்தான!
46. கஷ்டமான வேளைகளில் அல்லாஹ்வை நோக்கித் திரும்புவது, (அவனிடம்) எளிமையை வெளிப்படுத்துவது, மற்றும் உதவி கோருவது ஆகியன அழகிய செயல்முறைகளாகும்.
47. தூய்மையான பொருள்கள், ஹலாலாக ஆக்கப்பட்டுள்ளன.
48. அருட்கொடைகளுக்காக 'ஸஜதா ஷுக்ரு' - நன்றிக்கான ஸஜதா செய்யலாம்.
49. மக்கள் ஒருங்கிணைய – எல்லோருக்கும் வசப்படக் கூடிய, ஒழுங்கு முறை தேவை.
50. 'ஷரீஅத்தில்' உத்தரவுகளைப் பொதுவாக (அப்படியே) செயல்படுத்த வேண்டும். நுண்ணிய விடயங்களை தேடத் தேவையில்லை. 'அமல்' செய்யும் நோக்கமின்றி, கேட்கப்படுகின்ற வீண் கேள்விகள் தடை செய்யப்பட்டவை ஆகும்.
51. கேலி செய்வது, அறியாமையின் அடையாளம் ஆகும்.
52. அல்லாஹ்-வின் உத்தரவைச் செயல்படுத்துவது, கட்டாயமானதாகும்.
53. ஒரு பாதுகாவலன் (நிர்வாகி), நோயைக் காணும் பட்சத்தில், தீர்வு மற்றும் மருந்தையும் தரவேண்டும்.
54. அநியாயம் செய்பவன், தனக்கே கேடு செய்கிறான். பிறகு அதற்கான விலையை அவனே கொடுத்தாக வேண்டும்.
55. அல்லாஹ்-வுக்கு நன்றி செலுத்துவதென்பது, அவனுக்கு மாறுசெய்யாமல் இருப்பதாகும்.
56. ஈமான் - விசுவாசத்துடன், அமல் - செயல்புரிவதும் அவசியமானதாகும்.
57. 'ஷரீஅத்'-தின்படி உறுதியாக அமல் செய்யவேண்டும்.
58. அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் இருந்து, பயன்பெறாதவருடைய இதயம் 'கல்'-லாகி விடும்.
59. அல்லாஹ் பேசுவதற்கான ஆதாரமிருக்கிறது..! எங்கே வேண்டுமானாலும்.., எப்படி வேண்டுமானாலும்.., எப்பொழுது வேண்டுமானாலும்.., அவன் பேசுவான்.
60. அந்தரங்கம் மற்றும் வெளிப்படையானதை, அல்லாஹ் அறிகிறான்

61. விசுவாசத்திற்கு ‘அமல்’ நிபந்தனையாகும்; அந்த ‘அமல்’, ஸாலிஹான அமலாக – நபி (ஸல்) அவர்களின் வழியில், அல்லாஹ்-விற்காக ஆற்றப்பட வேண்டியது கட்டாயமாகும்.
62. ஒவ்வொரு சமுதாயமும், அல்லாஹ் - ரப்புல் ஆலமீனை எப்படி தூயமுறையில் வணங்கவேண்டுமோ அப்படி வணங்வேண்டியது அவசியம்.
63. மறுமை நாளின் வேதனைகள், ஒன்றைவிட ஒன்று, படுபயங்கரமானதாக இருக்கும்.
64. இரஸூல் (ஸல்) அவர்கள் வேதம் கொடுக்கப்பட்டவர்களுக்கும், இறைத் தூதரே!
65. நபிமார்கள் பிழை பொறுக்கப் பட்டவர்கள். (பாவமற்றவர்கள்)
66. சூனியக்காரர் ‘காபிர்’ ஆவார்.
67. மு∴மின்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் அனைத்தும் ‘விதி’க்கப் பட்ட ஒன்றாகும்.
68. மார்க்கத்தில் ஒன்றை மாற்றுவதோ, சிதைப்பதோ அல்லது அதில் புதிதாக ஒன்றை நுழைப்பதோ – அழிவுக்கு வழிவகுக்கும்.
69. மக்களை அவர்களின் நகரங்களில் இருந்து, வெளியேற்றுவது, தடைசெய்யப்பட்டது - ஹராம் ஆகும்.
70. இஸ்லாத்தின் சில விஷயங்களை நம்பிக்கை கொள்வதும், இன்னும் சிலவற்றை விட்டுவிடுவதும் அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல.
71. நபி(ஸல்) அவர்களுக்குப், பொருத்தமற்ற வார்தைகளைப் பயன்படுத்துவது ‘ஹராம்’ ஆகும்.
72. ‘நஸ்கு’ - மார்க்கச் சட்டத்தில் (அல்லாஹ் செய்த) மாற்றங்கள், அறிவு ரீதியாக ஏற்கத்தக்கதே! ‘நஸ்கு’ அறிவுக் குறைபாட்டின் அடையாளமில்லை ‘ஹிக்மத்’ - சூட்சுமத்தின் மீது கட்டமைக்கப் பட்டதாகும். இது நோய்க்கு ஏற்றவாறு, மருத்துவர்களும் வைத்தியர்களும் மருந்தை மாற்றுவதைப் போன்று.
73. ஒருவருக்கு உண்மை தெளிவாகாத பட்சத்திலும், அவர் அதனை, அறிய முடியாத நிலையிலும் அவர் இயலாதவர் ஆகிறார். ஆனால் உண்மையை அறிந்தபின்னே, எந்தக் சால்ஜாப்பும் (காரணமும்) ஏற்கப்பட மாட்டாது.
74. தவறுதலாக கிப்லா அல்லாத திசையை கிப்லா-வாகக் கருதி, தொழுதிருந்தால் அத்தொழுகை நிறைவேறிவிடும்.
75. மறைவான விஷயங்களில் தலையிட்டதும், அதில் பொய்யுரைத்ததும் கூட, யூதர்களின் குற்றமாகும்.
76. பெற்றோர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்வது, கட்டாயமானதாகும்.
77. உறவினர்களுக்கு உதவி செய்தால் இரட்டைக் கூலி கிடைக்கும்.

78. அநாதைகளை ஆதரிப்பதும் ஏழைகளுக்கு உதவி செய்வதும் விருப்பத்திற்குரிய செயல்களாகும்.ன்
79. பொறாமை ஒரு தீய குணமாகும். இதனால் ஒருவன் பிறருடைய அருட்கொடைகள் பறிக்கப்படுவதை விரும்புகிறான்.
80. கல்வி சார்ந்த தர்க்கங்களும், உரையாடல்களும் ஆதாரங்கள் மற்றும் சான்றுகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.
81. உண்மையாக உறுதி கொள்வோரே, திருக்குர்ஆனின் மூலமாக சரியான பயனைப் பெறுவார்,
82. ஓர் ஆலிம் (மார்க்க அறிஞர்) தடம் புரள்வது,பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.
83. பாவத்தின் காரணமாக, இதயத்தில் உள்ரங்கமாக நோய் ஏற்படுகிறது.
84. அசத்தியத்தின் மீதான வெறி, வழிகேட்டின் அடையாளமாகும்.
86. யூதர்கள் உலக வாழ்க்கையில் பேராசையுடன் இருந்தார்கள். இதனைத் திருக்குர்ஆன் பழிக்கிறது.
87. வழிகேட்டில் இருப்பவன், தனக்குத்தான் கேட்டை விளைவிக்கிறான். வழிகாட்டுவோருக்கோ, இறை அழைப்பாளருக்கோ எந்த நஷ்டமும் ஏற்படப் போவதில்லை.
88. கிலாபத் மற்றும் நுபுவ்வத் (கால கட்டம்) இமாமத்தின் காலகட்டம் எனப்படும். இது நல்லோருக்குக் கிடைக்கும்.
89. ‘வஸீலா’ மற்றும் ‘துஆ’-க்களின் சமயம், அல்லாஹ்வின் திருப்பெயர்களில் ஆதரவு வைக்கலாம்.
90. உண்மையான நேர்வழி, யூதர்களிடமும் இல்லை; கிறித்தவர்களிடமும் இல்லை. நபி இப்றாகீம் (அலை) அவர்களின் வழிமுறையிலும், இரஸுல் (ஸல்) அவர்களிடத்திலும் தான் இருக்கிறது.
91. பொதுவாக நபிமார்கள் அனைவர்மீதும், குறிப்பாக நபி (ஸல்) அவர்கள் மீதும் விசுவாசம் கொள்வது கட்டாயமாகும்.
92. மார்க்கம் மற்றும் உலகக் காரியங்களில், அநியாயக் காரனுக்குத் தலைமைத்துவத்தைத் தரக்கூடாது. அது நீடித்தும் இருக்காது.
93. ‘பைத்துல்லாஹ்’ மட்டும் புனிதப் பகுதி இல்லை! முழு மக்கா நகரமும் ஹரம் - புனிதமான இடமேயாகும்.
94. மஸ்ஜிதுல் ஹராமில், ‘இ∴திகாப்’ இருப்பது சட்டப்பூர்வமானதாகும்.
95. இப்ராஹீம் (அலை) அவர்களின் ‘ஷரீஅத்’ சட்டங்களில், மாற்றப்பட்டவைகளைத் தவிர மற்றவை நபி முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உம்மத்தினருக்கும் பொருந்தும்.
96. மக்கள் யாவரும் அல்லாஹ்விடம் தவ்பா – பாவமன்னிப்பு கேட்க

வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

97. தலைமைத்துவம் சோதனைகளுக்குப் பிறகுதான் கிடைக்கும் -- இப்றாஹீம் (அலை) அவர்களுக்குக் கிடைத்ததைப் போல்.

98. அல்லாஹ்' வகுத்துள்ள கத்ரு எனும் - விதியை பரிபூரணமாக ஏற்கும் அடியானுக்கே, முழுமையான கண்ணியம் உணல்டு.

99 ஓர இறை அழைப்பாளன், தன் சந்ததியினருக்காக துஆ – பிரார்த்தனை செய்யவேண்டும்.

100 மக்களின் இதயம் க.்.பதுல்லாஹ்வால் ஈர்க்கப்படுகிறது. எனவே க.்.பதுல்லாஹ்வை மகிமைப் படுத்துகிறவன் மார்க்கத்தையே மகிமைப் படுத்துகிறான்.

101 தூதுத்துவத்தின் நோக்கங்களில், பரிசுத்தப்படுத்துதலுடன் பக்குவப்படுத்துதலும் உண்டு.

102 இஸ்லாமிய வளர்ப்பிலே, ஆன்மா மற்றும் உயிர்கள் இறையுணர்வில் நனைந்து தோய்ந்து விடுகின்றன.

103 அமலும் ஈமான்தான்; தொழுகையை அல்லாஹ் ஈமான் என்கிறான்.

104 உதவி கோரப்படுகிறவன், அல்லாஹ்வே! அவனிடத்தில் தெளிவான முறையில் உதவி கேட்கப்படவேண்டும் என்பது ஷரீஅத்தின் கட்டளை என சொல்லப்பட்டுள்ளது.

105 ‘பர்ஜக்’-உலக (வாழ்க்கை) உண்மையானது.

106 மறுமையின் காரியங்களை, யாரும் உணர்ந்து கொள்ள இயலாது.

107 காபிர்களுக்குச் சொல்லப்பட்ட மறுமை தண்டனைகள், அவர்கள் ‘குப்ரு’ உடைய நிலையில் மரணித்தால்தான்.

108 தொழும் சமயத்தில் கிப்லா-வை முன்னோக்குதல் கட்டாயமாகும்.

109 ஹஜ் மற்றும் உம்ரா வின் ருக்னு - முக்கியக் கடமையான ‘ஸபா – மர்வா’ இடையே ‘ஸயீ’ செய்தல், அல்லாஹ்வின் அடையாளங்களில் உள்ளது.

110 அல்லாஹ்வை நினைவு கூர்ந்திட (திக்ரு) உத்தரவு.

111 நன்றி செலுத்துதல், குப்ரு - இறைநிராகரிப்பின் எதிர்ப்பதம் ஆகும். மு.்.மின்கள் ஒவ்வொருவரும் அல்லாஹ்விற்கு நன்றி பாராட்டுவோராகத் திகழ வேண்டும்.

112 அல்லாஹ்வின் வழிமுறையை விட்டு தூரமாகுவதன் மூலமாக முட்டாள்தனம் உருவாகும்.

113 வஹீ-யின் ஒளி இல்லாமல், பக்குவத்தைப் பெறமுடியாது.

114 அல்லாஹ்வின் மீதான அன்புடன் யாரையும் கூட்டு சேர்க்க இயலாது. மக்கத்துக் காபிர்களோ தமது சிலைகளையும் நேசித்து வந்தார்கள்.

115 ஒன்றை ஹராம் மற்றும் ஹலால் ஆக்குகின்ற அதிகாரம், முழுக்க முழுக்க அல்லாஹ்விற்கு மட்டுமே!

116 படைப்பில் எப்படி மற்றவர்கள் கூட்டாக இல்லையோ! அப்படியே ஏவுதல் மற்றும் தடுப்பதிலும் யாரும் கூட்டு இல்லை.

117 அல்லாஹ்வைப் பற்றி, அறியாத எதையும் கூறக் கூடாது.

118 அறுப்பதற்கு முன் இறந்திட்ட பிராணிகள் உண்பதற்குத் தடை செய்யப்பட்டவை ஆகும்.

119 இரத்தத்தைச் சாப்பிடக் கூடாது.

120 பன்றியின் இறைச்சி ஹராம்..! கொழுப்பு, தோல் அனைத்துமே ஹராம் ஆகும்.

121 அல்லாஹ்வின் பெயர் சொல்லப்படாமல் அறுக்கப்பட்ட பிராணிகள் உண்ணத் தடைசெய்யப்பட்டவை.

123 ஷைத்தானைப் பின்பற்றத் தடை செய்யப்பட்டுள்ளது.

124 தியத் - இழப்பீட்டுத் தொகை சரியாக வழங்கப்பட வேண்டும்.

125 ஷரீஅத்திற்கு மாற்றமாக இல்லாதவரை வஸிய்யஹ் - மரணசாசனத்தை மாற்றக் கூடாது.

126 ஷரீஅத்-திற்கு மாற்றமாக வஸிய்யத் - மரண சாஸனம் செய்பவன், பாவியாவான்.

127 பயணத்தில் இருப்பவர், தன் நோன்பைப் பிற்படுத்தி நோற்கலாம்.

128 தள்ளாத வயதினர் தவற விடுகின்ற நோன்புகளுக்குப் பகரமாக, ‘பித்யா’ கொடுக்கலாம்.

129 ‘ஜனாபத்’-குளிப்பு கடமையான நிலையிலுள்ளவர், நோன்பு நோற்கலாம்; தொழுகைக்கு முன்பாகக் குளித்துவிடவேண்டும்.

130 தவறான முறையில் பிறர்பொருளை உண்பது ஹராம் ஆகும்.

131 நீதிபதி அல்லது ஆட்சியாளர் வழங்கும் தீர்ப்பால், ஹராமும் ஹலாலும் உருவாகாது.

132 யுத்த களத்திலும் முஸ்லிம்கள் வரம்பு மீறக் கூடாது.

133 த.்.வா – அழைப்பிற்கு முன், யுத்தம் செய்யக்கூடாது.

134 ‘முஸ்லஹ்’ - உடலைத் துண்டு துண்டாகச் வெட்டிச் (சிதைத்தல்) கூடாது.

135 குழந்தைகள், பெண்கள், மற்றும் முதியவர்களைக் கொலை செய்யக் கூடாது.

136 தன் உயிர், செல்வம், மற்றும் கண்ணியத்திற்காக எதிர்த்துப்போராடலாம்.

137 இஹ்ராம் - உடைய நிலையில், தாம்பத்திய உறவில் ஈடுபட்டுவிட்டால் மீண்டும் அதை அடுத்த வருடம் ‘களா’-செய்ய வேண்டும்.

138 சக்தியுடையவர்கள் மீதே ஹஜ் செய்வது, கட்டாயம் ஆகும்

139 ‘துஆ’ நிறைவேற, இக்லாஸ் (மனத்தூய்மை), உறுதி, மனமொன்றிப் பிரார்த்தித்தல், அநியாயம் மற்றும் அவசரப்படுதல் ஆகியவைகளைத் தவிர்த்தல் உள்ளிட்ட யாவும் அவசியமானவை ஆகும்.

140 அல்லாஹ் செல்வத்தைக் குறிக்க ‘கைர்’ எனும் பதத்தைப் பயன்படுத்தியுள்ளான; அதனைப் பாதுகாக்க உத்தரவிட்டும் இருக்கிறான்.

141 மக்களின் செல்வத்தைப் பத்திரப்படுத்துவதிலும், பாதுகாப்பதிலும் எத்தகைய குறைபாட்டையும் செய்யக்கூடாது.

142 ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்விற்காக மட்டும் செய்யவேண்டும்.

143 இஸ்லாத்தின் செய்தி, யாரை எட்டவில்லையோ - அவர் மறுமைநாளில், ‘வஹீ’-யின் தொடர்பற்ற காலகட்ட மக்களில் ஒருவராகக் கருதப்படுவார். அவருக்காக தனித்தேர்வொன்று நடத்தப்பட்டு, அவர்மீது முடிவெடுக்கப்படும(---அஷ்ஷைக் அல்பானீ (ரஹ்))

144 எதிரியை எதிர்கொள்ளவும், அவனது தீமையை அகற்றவும் எப்போதும் தயாராக இருக்கவேண்டும்.

145 பருவத்தை எட்டாத பிள்ளைகளைக் கவனிப்பது பெற்றோர் மீது கடமையாகும். அதன்பின் உறவினர் மீது கடமையாகும். பருவமடைந்துவிடும் பிள்ளைகள் மீது பெற்றோரைக் கவனிப்பது கடமையாகும்.

146 இஸ்லாமிய மார்க்கம் மக்களுக்கு நன்மை செய்ய நாடுகிறது; குழப்பத்தில் இருந்து அவர்களைத் தூரமாக்க விரும்புகிறது.

147 இஸ்லாத்தில் அறிவாற்றலுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. அதனைப் பாதுகாக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

148 இஸ்லாம் நடைமுறைகளில் நிலவுகின்ற சிரமங்களுக்கு முடிவுகட்ட வந்துள்ளது.

149 மனிதர்கள் அனைவரையும், அல்லாஹு தஆலா, சுதந்திரமாக செயல்படும் வகையில் படைத்துள்ளான். அவன் யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை.

150 இணைவைக்கும் பெண்களைத் திருமணம் செய்யலாகாது. அவ்வாறே, படைப்பாளனை நம்பாதவர்கள் மற்றும் மதம் மாறியோரையும் திருமணம் புரியக்கூடாது.

151 வேதம் பெற்ற(யூத கிறித்தவ) பெண்களை, அவர்கள் கற்புடையவர்களாக இருப்பின் திருமணம் செய்யலாம்.

152 பெண்களின் பின் துவாரத்தில் உறவுகொள்ளக் கூடாது.

153 ஈலா. (மனைவியுடன் சேரமாட்டேன் என சத்தியமிடுதல்) அதிக பட்சக் கால அளவு நான்கு மாதங்கள் ஆகும்.

154 தலாக் விடப்பட்ட – கர்ப்பமாக இல்லாத, பெண்ணின் ‘இத்தா’ கால அளவு மூன்று மாதங்கள் ஆகும்.

155 ஈலா.ஃ. (மனைவியைப் பிரிந்திருக்கச் சத்தியமிடு) வதை முறிப்போருக்குப், பரிகாரம் உண்டு.

156 ‘மஹர்’ நிர்ணயம் செய்யப்படாவிட்டால், நடைமுறையிலுள்ள மஹர் வழங்கப்படெ வேண்டும்.

157 தலாக் ‘ரஜயீ’ (மீட்பு தலாக்) உடைய காலக் கட்டத்தில் தன் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்பினால் சேர்ந்து வாழலாம்.

158 இரண்டு தலாக்குகள் வரை மனைவியை மீட்டுக் கொள்ளலாம். மூன்றாவதில் மீட்க இயலாது.

159 முத்ஆ – தற்காலிகத் திருமணம் கூடாது.

160 ஒரு பெண்ணிற்கு ‘குல.ஃ’ (விவாக பந்தத்தை முறிக்கக் கோரும்) உரிமை உண்டு.

161 பாயின் - மூன்றாம் ‘தலாக்’-கைப் பெற்ற பெண்ணை மீட்டெடுக்க, நிபந்தனையாக இருக்கின்ற திருமணம், சீர்கெட்டால், அப்பெண் முதல் கணவருக்கு ‘ஹலால்’ ஆக முடியாது.

162 அல்லாஹ்வின் வசனங்களைக் கிண்டல் செய்தல், ‘குப்பார்’ - இறைநிராகரிப்பாளர்களின் அடையாளம் ஆகும்.

163 தமது கணவன்மார்களிடம் செல்லவிரும்புகின்ற பெண்களை, அப்பெண்களின் பொறுப்பாளர்கள் தடுப்பதற்குத் தடை!

164 பிள்ளைகளுக்குப் பாலூட்ட, அதிகபட்ச காலகட்டம் இரண்டு வருடங்கள் ஆகும்.

165 குழந்தை மற்றும் பாலூட்டுகிறவர்களுக்குத் தேவையான பராமரிப்புச் செலவு தந்தையின் மீது உள்ளது.

166 மற்றொருவரைத் திருமணம் செய்யாதவரை, குழந்தையைத் தாய்தான் பராமரிப்பாள்.

167 தாமதமாகத் தொழுவதற்கு அனுமதி இல்லை.

168 ஒரு விதவைப் பெண் தன் ‘இத்தா’ காலத்தைக் கணவன் வீட்டிலேயே கழிப்பாள்.

169 அல்லாஹ்வின் வரம்புகளை அறிந்திட கல்வியைத் தேடுவது, அவசியம் ஆகும்.

170 நபிமார்களுக்கு மத்தியில், நாமாகப் பாரபட்சம் காட்டக் கூடாது. அல்லாஹ் நபிமார்களில் சிலரை சிலரை விட சிறப்பித்திருந்தால் அதனை எடுத்துரைக்கலாம்; அதே சமயம் குறைத்து மதிப்பிடுதல், இழிவுபடுத்துதல், பீற்றிக்கொள்ளுதல் கூடாது.

171 இதர மக்களைவிட இஸ்லாத்தின்படி செயல்படுவோரை அல்லாஹ் சிறப்பிக்கிறான்.

172 சீரையும் சிறப்பையும், சிறப்பை உடையவனிடம்தான்

கேட்கவேண்டும். பிறரிடம் வேண்டுதல், துயரத்திற்கே வழிவகுக்கும். அல்லாஹ்தான் அனைவருக்கும் சிறப்பை அருள்கிறான்.

173 கொள்கைக்காகப் போர்செய்தல் அனுமதிக்கப்பட்டதே! இது நபிமார்கள் அனைவரின் வழிமுறையுமாகும்.

174 திம்மீ - இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் பிற மதத்தினர், நிர்ப்பந்திக்கப்பட்டு முஸ்லிமானால் அது ஏற்கப்பட மாட்டாது. அவர்களே மனமுவந்து இஸ்லாத்தை ஏற்றால், ஏற்கப்படும்.

175 கிதால் - யுத்தம் உலகநோக்கங்களுக்காக இல்லாமல், இக்லாஸ் - மனத்தூய்மையுடன் புரியப்படவேண்டும்.

176 ‘ஸகீனஹ்’ (மனஅமைதி), ஸுகூன் எனும் பதத்தில் இருந்து வந்ததாகும். இந்த மனஅமைதியை அல்லாஹுதஆலா, முஸ்லிம்களுக்கு பயம் மற்றும் கஷ்டமான நேரங்களில் அருள்கிறான்.

177 யுத்த நேரத்தில், ‘துஆ’ செய்வது, உதவியைப் பெறுவதற்கான மகத்தான காரணமாகும்.

178 ‘தக்தீர்’ - விதியைப் பயந்து ஓடுவதால், எந்தப் பயனும் இல்லை.

179 எதிரிகளோடு யுத்தம் செய்ய, ஆசைப்படுவதோ, அதற்காகப் பிரார்த்திப்பதோ கூடாது. ஆனால் யுத்தம் வந்து விட்டால் பொறுமையுடன் போராடுவது, கடமையாகும்.

180 பொறுப்பாளர் மற்றும் வழிகாட்டியாக உள்ளோர், மக்களுடைய காரியங்களின் முடிவுகளையும், விளைவுகளையும் தெளிவுபடுத்த வேண்டும்.

181 அல்லாஹ்வின் உதவியையும் உறுதுணையையும் பெறுவதிலே, மெஜாரிட்டி மற்றும் மைனாரிட்டி ஒரு பொருட்டில்லை.

182 யுத்தம் வரும்போது பலஹீனமானவர்களின் இயலாமை, தெளிவாகும்.

183 தளபதியின் சொற்படி கட்டுப்பட்டு நடக்கின்ற படையினரும்கூட, (இறை) உதவி கிடைத்திட ஒரு காரணமாகும்.

184 அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையும், அவனைச் சந்திக்கவிருப்பதை உறுதி கொள்வதும், பொறுமையைப் பெறுவதற்கான வழிமுறையாகும்.

185 செய்த உதவியைச் சொல்லிக்காட்டுவது, பழிப்பிற்குரிய செயல் ஆகும். அதனால் அறப்பணிகளுக்குக் கிடைக்கின்ற நற்கூலிகள் குறைந்து கொண்டே போகும்.

186 நல்ல வார்த்தையும் தர்மமாகும்.

187 தூய செல்வத்தில் இருந்து, அறப்பணி செய்வதை இஸ்லாம் உறுதிப்படுத்துகிறது.

188 மனிதர்களிடம் கெஞ்சிக் கேட்பது, இழிவான செயல்.

189 எதை நமக்காக விரும்புகிறோமோ, அதையே பிற மக்களுக்கு விரும்பவேண்டும்.

190 மார்க்க அறிவைப் பெற்றவர்கள் தங்களை மதித்திடுக! உலகத்தைப் பெறுவதற்காக உலகாதாய வாதிகளிடம் குனிந்து பணியத் தேவையில்லை.

191 அனைத்து நன்மைகளும், தர்மம் மற்றும் அறப்பணிகளும், உண்மையில் அவன் பக்கமே திரும்பிவரக் கூடியவைகளாக உள்ளன.

192 பாவமான செயலைச் செய்திட்ட ஒரு விசுவாசி, எப்பொழுதும் நரகத்திலேயே இருக்கமாட்டார்; தன் தீவினைக்காக கூலியைப் பெற்றபின், இறுதியாக சுவனம் செல்வார்.

193 எல்லாவிதமான வியாபாரங்களும் அனுமதிக்கப்பட்டதே! ஷரீஅத்தால் தடைசெய்யப்பட்டதைத் தவிர..!

194 வட்டி உறுதியாகத் தடை செய்யப்பட்டதாகும். வட்டி அடிப்படையிலான கொடுக்கல் வாங்கலைச் செய்கிறவர்களுடன் அல்லாஹ் போர்ப்பிரகடனம் செய்கிறான்.

195 கடன் கொடுப்பது விரும்பத்தக்க செயல் ஆகும். கடன் கொடுப்பவர், கொடுத்த கடனை முழுமையாகத் திரும்பப் பெறலாம்.

196 யாருடைய கடன் அதிகமாகிவிட்டதோ, அவருடைய பொருள்களில் அவருக்கு அவசியமானவைகளைத் தவிர மற்றவைகளை, கடன் கொடுத்தவர் எடுத்துக் கொள்ளலாம்.

197 ஏதேனும் ஒரு விஷயம் தீர்மானிக்கப்பட்ட பிறகு அதிலிருந்து புரண்டுவிட்டால் அதுவே بخس (பக்ஸ்) எனப்படுகிறது.

198 முஸ்லிம்களின் சாட்சி மட்டுமே ஏற்கப்படும்.

199 பொருளாதார விஷயங்களில் பெண்களும் சாட்சி சொல்லலாம்.

200 சாட்சியிடம், அதாலத் - சரியான தகுதி (இறையச்சம், ஒழுக்கம், நபிவழி) இருக்கவேண்டும்.

201 சாட்சி மற்றும் ஆதாரத்திற்காக (ஒருவர்) அழைக்கப்பட்டால், மறுக்கமுடியாது.

202 (ஷரீஅத்தின் வரம்பிற்குள் நின்று) அடகு வைப்பது அனுமதிக்கப்பட்டது; கட்டாயமன்று.

203 பெரும் பாவங்கள் செய்தவர்களின் குற்றத்தையும் அல்லாஹ் நாடினால் மன்னித்து விடலாம்.

204 தீய எண்ணங்களுக்காகக் குற்றம் பிடிக்கப்பட மாட்டாது; அத் தீய எண்ணத்தில் உறுதியோடு இருந்திருந்தால், குற்றமாகக் கொள்ளப்படும்.

205 மறதி குற்றமன்று; அதற்கென கேள்வியும் இல்லை.

206 எண்ணமில்லாத நிலையில், நிகழ்ந்திடும் தவறுகள் மீது

தண்டனை இல்லை. வேண்டும் என்றே செய்யப்படும் தவறுகளுக்காக தண்டனை உண்டு.

207 இஜ்திஹாத் (சட்ட விதிகளை ஆய்ந்து முடிவெடுத்தல்) செய்கிறவர், தன் முடிவின்போது தவறிழைத்தால், எந்தக் குற்றமும் இல்லை.

208 நன்மைக்காக 'கஸ்ப்' (சம்பாதித்தல்) என்கிற பதமும் தீமைக்காக 'இக்திஸாப்' (தேடிக் கொள்ளுதல்) எனும் பதமும் உபயோகிக்கப்பட்டுள்ளன. இரண்டிற்கும் இடையே வித்தியாசம் இதுவே.., நன்மை இயல்பான அமல் ஆகும். ஆனால் தீமைக்காக மனிதன் மெனக்கெடுகிறான்.

209 இப்னு ஹஸ்ம் (ரஹ்) கூறுகிறார்கள்: ''அல்லாஹ் எந்த விஷயங்களைக் கடமையாக ஆக்கியுள்ளானோ, அவைகளைச் செய்திட சக்திபெற்ற மனிதன், அந்த அமல்களை நிறைவேற்றுவது கட்டாயமாகும். சக்தி இல்லையென்றால் கட்டாயமில்லை. அக்கடமைகளில் சிலதை மட்டும், நிறைவேற்றச் சக்தி பெற்றிருந்தால், அவற்றை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளான். குறைவாக இருப்பினும் சரியே!

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள

- அல்பகரா அத்தியாயத்திற்கும், ஆலுஇம்ரான் அத்தியாயத்திற்கும் உரிய பொதுவான தலைப்பு ''தூதுத்துவத்தை நிலைநாட்டுதல்'' என்பதாகும்.
- ஸூரதுல் பாதிஹாவில் அல்லாஹ்-வின் புகழ்ச்சி மற்றும் கீர்த்தி; அதே சமயம் அடுத்து வருகின்ற அத்தியாயங்கள் - 'அல்பகரா மற்றும் ஆலுஇம்ரான் இரண்டிலும், ''தூதுத்துவத்தை நிலைநாட்டுதல்'' பற்றிய விபரங்கள்.
- அல்மஃழூப் : - இதைப் பற்றிய முழுமையான விளக்கம் ஸூரா அல்பகரா(2) மற்றும் ஸூரா அந்நிஸா(4) வில் தரப்பட்டுள்ளது.
- அள்ளால்லீன் : - இதைப் பற்றிய முழுமையான விளக்கம் ஸூரா ஆலு இம்ரான்(3) மற்றும் ஸூரா அல்மாயிதா(5) வில் தரப்பட்டுள்ளது.
- ''இஹ்தினா'' -(அல் பாதிஹாவில்) 'துஆ' வேண்டப்பட்டது; ''ஹுதல் லின்னாஸ்'' -(அல் பகராவில்) துஆ ஏற்கப்பட்டது.
- இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் (2:3), நடுப்பகுதியில் (2:136), கடைசிப் பகுதி (2:285) ஆகியவைகளில் ஈமான் (இறை விசுவாவசத்தின்) முத்தாய்ப்பான விளக்கம் தரப்படுகிறது.